மேற்சொன்ன விலைகள் 1973-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19-ம் நாளி லிருந்து

மிக நேர்த்தி குவிண்டால் ஒன்றுக்கு	ரூ. 68
நேர்த்தி குவிண்டால் ஒன்றுக்கு	ரூ. 66
நடுத்தரம் குவிண்டால் ஒன்றுக்கு	ரூ. 63
மோட்டா ரகம் குவிண்டால் ஒன்றுக்கு	ரூ. 59

மேற்கண்ட கொள்முதல் விலைகளும் கூட 1973-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 6-ம் நாளிலிருந்து மேலும் திருத்தப்பட்டு, மோட்டா ரகத்துக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 66 எனவும், மற்ற எல்லா ரகங்களுக்கும் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 70 எனவும் விலை வரையறுக்கப்பட்டுள்ளது.

நேர்த்திக்கு ரூ. 75, மிக நேர்த்திக்கு ரூ. 78 என்று விலை நிர்ணயித்து, மத்திய அரசை அனுமதி கேட்டு செய்தி அனுப்பியிருக்கிறோம்.

திரு. என். கே. பழனிசாமி: சார், சர்க்கார் அனுமதித்த சரியான விலை மூட்டைக்கு ரூ. 50 தான் ஆகிறது. கொள்முதல் செய்கிற நெல்கள் பூராவும் அந்த விலையில் கிடைப்பதில்லை. காரணம், எந்த விலை கொடுத்தாலும் அதிகப் படியான பாடியை வைத்துக்கொண்டு வாங்குவதன் காரணமாக, விவசாயி களுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, தஞ்சையில் விளைகிற நெல் பூரா வையும் சர்க்கார் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாகக் கொள்முதல் செய்ய ஏதாவது ஏற்பாடு வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இதுவரையிலே, சர்க்கார் மொத்தத் தொகுப்புக்கு அதிகமாக லெவி முறையில் வாங்கி வந்தது. ஆனால், இந்த ஆண்டு சர்க்கார் நிர்ணயித்துள்ள விலையில், லெவி இல்லாத முறையில், தஞ்சை மாவட்டத்திலே 1,30,000 டன் நெல்லைக் கொள்முதல் செய்திருக்கிறோம். மேலும், இந்தச் சம்பா அறுவடையிலே விலை குறையாமல் இருப்பதற்காக, வியாபாரிகளிடம் மாட்டிக்கொள்ளாமல் இருப்பதற்குத் தேவையான ஏற்பாடு களைச் செய்து கொண்டிருக்கிறோம்.

Procurement of paddy.

* 265 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(a) whether the Government have asked the Food Corporation of India to collect the levy paddy in this State; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) ஆம்.

(இ) மத்தியத் தொகுப்புக்கு வழங்குவதாக இவ்வரசு ஒப்புக்கொண்ட பொறுப்பை நிறைவேற்றுவதற்காகவும், இந்திய உணவுக் கழகத்தைச் சேர்ந்த அரைவை ஆலைகள் நிற்காமல் இயங்கும் பொருட்டும், இவ்வரசு, 1973 ஆம் ஆண்டு சம்பாப் பருவத்தில் தஞ்சாவூர் மாவட்டத்திலும், தென்னார்க்காடு மாவட்டத்தில் கடலூர், சிதம்பரம், விருத்தாசலம் ஆகிய இடங்களிலும் லெவி நெல்லைக் கொள்முதல் செய்து கொள்ளுமாறு இந்திய உணவுக் கழகத்தைக் கேட்டுக்கொண்டது.

திரு. கே. எ. வகாப்: அரசாங்கம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 78, ரூ. 75 என்று நிர்ணயித்திருந்தும், விவசாயிகளிடமிருந்து வாங்குகின்ற வியாபாரிகள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது லெவியைப் பற்றி, விலையைப் பற்றி அல்ல. லெவியைப் பற்றி கேளுங்கள்.

திரு. கே. எ. வகாப்: வியாபாரிகள் விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யும்போது, அவர்களுக்கு லெவியாலே நஷ்டம் ஏற்படுகிறது என்ற காரணத்தைக் காட்டி, விலையைக் குறைத்துக் கொடுக்கிறார்கள். இப்படிக் குறைத்துக் கொடுப்பதைத் தவிர்ப்பதற்காக விவசாயிகளிடமிருந்து அரசாங்கமே நேரடியாக வாங்க ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: உறுப்பினர் அவர்கள் எங்கெங்கு நெல் இருக்கிறது என்று சொன்னால் உடனே நாளைக்கே நெல் வாங்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

திரு. என். கே. பழனிசாமி: சார், இந்த வருஷம் மத்திய சர்க்கார் நிர்ணயித்துள்ள கோட்டா 6 இலட்சம் டன். ஆனால், இது வரையிலும் 1,30,000 டன்தான் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறதே, இதற்கு, இந்த லெவி சரியாக நடைபெறவில்லையென்று அர்த்தமா, அல்லது உணவு சப்ளை கார்ப்பரேஷன் சரியாக நடைபெறவில்லையென்று அர்த்தமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இந்த வருஷம் என்று சொல்லியிருக்கிறது. சென்ற வருஷத்தைவிட இந்த வருஷம் கொள்முதலை இரண்டு மடங்கு அதிகப்படுத்தியிருக்கிறோம். இப்பொழுதுதான் தமிழகத்திலே பரவலாக அறுவடை ஆரம்பமாகியிருக்கிறது. ஆகவே, லெவி போட்டு இப்பொழுதுதான் 20 நாட்களாகிறது. இந்த வருஷம் அதிகமான கொள்முதலை எதிர்பார்க்கிறோம்.